சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 17.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **102/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-3 |
| சாட்சியின் பெயர் | : | மகேஷ் |
| தந்தை பெயர் | : | அமிர்தலிங்கம் |
| கிராமம் | : | பெரிய சிங்களாந்தி |
| தாலுக்கா | : | திருத்துறைப்பூண்டி |
| தொழில் | : | ஓட்டுநர் |
| வயது | : | 47 |

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

2, 4, 5 மற்றும் 7 எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :

முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை தான் நான் போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன். அ.சா-1 கார்த்திகேயன் என்பவருடன் எத்தனை வருடங்கள் பழக்கம் என்றால் 10 வருட பழக்கம். நானும் அ.சா-1ம் AITUC

சங்கத்தில் ஒன்றாக உள்ளோம் என்றால் சரிதான். அ.சா-1 பழக்கத்தின் அடிப்படையில் முதல் விசாரணையில் RMS என்பவர் கார்த்திகேயன் என்பவரை வெட்டுங்கடா என்று சொன்னதாக சரவணன் என்பவர் கார்த்திகேயனை அரிவாளால் வெட்டினார் எனவும், எதிரிகள் ஒரு இன்டிகோ மற்றும் ஒரு ஸ்கார்பியோ கருப்பு கலர் காரில் வந்தார்கள் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ளது போல் குற்ற சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.02.17 18:33:20 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.